

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (02.08.24) ஈரோடு மற்றும் கரூர் மாவட்டங்களில் உள்ள 382 ஊராட்சிகளுக்கு 633 கலைஞர் விளையாட்டு உபகரணங்களின் தொகுப்பை வழங்கினார். இந்நிகழ்ச்சியில் வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் சு.முத்துசாமி, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர். அதுல்ய மிஸ்ரா, ஈரோடு மாநிலங்களவை உறுப்பினர் அந்தியூர். ப. செல்வராஜ், ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கே.ஈ.பிரகாஷ், சட்டமன்ற உறுப்பினர்கள் ஈ.வி.கே.எஸ்.இளங்கோவன், ஏ.ஜி. வெங்கடாச்சலம், ஈரோடு மாநகராட்சி மேயர் திருமதி. சு.நாகரத்தினம், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ. மேகநாத ரெட்டி, ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் ராஜ கோபால் சுங்கரா, கரூர் மாவட்ட ஆட்சித்தலைவர் மீ.தங்கவேல், பாரா பாட்மிட்டன் வீரர் ரித்திக் ரகுபதி, கையுந்து பந்து வீராங்கனை திருமதி. ஜெ. மகேஸ்வரி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.



இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (02.08.24) தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்திற்கு ரூ.10.67 கோடி மதிப்பில் புதிய தலைமை அலுவலக கட்டடம், சேலம் மாவட்டத்தில் ரூ. 20 கோடி மதிப்பில் பன்னோக்கு விளையாட்டு வளாகக் கட்டடத்திற்கு அடிக்கல் நாட்டினார். இந்நிகழ்ச்சியில் வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் சு.முத்துசாமி, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர். அதுல்ய மிஸ்ரா, ஈரோடு மாநிலங்களவை உறுப்பினர் அந்தியூர். ப.செல்வராஜ், ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கே.ஈ.பிரகாஷ், சட்டமன்ற உறுப்பினர்கள் ஈ.வி.கே.எஸ். இளங்கோவன், ஏ.ஜி.வெங்கடாச்சலம், ஈரோடு மாநகராட்சி மேயர் திருமதி. சு.நாகரத்தினம், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி, ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் ராஜ கோபால் சுங்கரா, கரூர் மாவட்ட ஆட்சித்தலைவர் மீ.தங்கவேல் பாரா பாட்மிட்டன் வீரர் ரித்திக் ரகுபதி, கையுந்து பந்து வீராங்கனை திருமதி. ஜெ.மகேஸ்வரி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

## ஒவ்வொரு குடும்பத்திற்கும்

# அரசின் சேவைகள் சென்றடைவதே ‘திராவிட மாடல்’ அரசின் நோக்கம்!

## ஈரோட்டில் 382 ஊராட்சிகளுக்கு கலைஞர் விளையாட்டு உபகரணங்கள் – நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் உறுதி!

ஈரோடு,ஆக.4-

**ஈரோட்டில், ஈரோடு மற்றும் கரூர் மாவட்டங்களைச் சேர்ந்த 382 ஊராட்சிகளுக்கு கலைஞர் விளையாட்டு உபகரணங்கள் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா, நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கி, இளைஞர்நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் சிறப்புரையாற்றினார்.**

**அப்போது அவர் ஆற்றிய சிறப்புரை வருமாறு:**

ஒவ்வொரு முறையும் ஈரோட்டிற்கு வரும்போது ஒரு தனிப் புத்துணர்ச்சி ஏற்படும். அதற்கு காரணம் தந்தை பெரியார் பிறந்த மண், இந்த ஈரோட்டு மண். பெரியாரின் ஈரோட்டு குருகுலம் தான் பேரறிஞர் அண்ணாவுக்கும், கலைஞர் அவர்களுக்கும் குருகுலம். அவர்களை உருவாக்கியதும் இந்த மண்தான்.

அப்படிப்பட்ட பெரியாரின் ஈரோடு மாநகரில் முத்தமிழறிஞர் கலைஞரின் பெயரில் கலைஞர் ஸ்போர்ட்ஸ் கிட் மற்றும் அரசு நலத்திட்ட உதவிகளை வழங்குவதில் நான் மிகுந்த பெருமை அடைகின்றேன். மகிழ்ச்சி அடைகின்றேன்.

ஈரோடு மற்றும் கரூர் மாவட்டங்களைச் சேர்ந்த 382 ஊராட்சிகளுக்கு இன்று இந்த மேடையில் `கலைஞர் ஸ்போர்ட்ஸ் கிட்ஸை’ வழங்க இருக்கிறோம்.

தமிழ்நாடு அரசின் வருவாய்த்துறை, சுகாதாரத்துறை, மகளிர் திட்டம், கூட்டுறவுத்துறை, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை, மாற்றுத்திறனாளிகள் நலத்துறை ஆகியவற்றின் சார்பாக, கிட்டத்தட்ட 4 ஆயிரம் பேருக்கு சுமார் 22 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நலத்திட்ட உதவிகளை வழங்க இருக்கின்றோம்.

தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய 12 ஆயிரத்து 525 கிராம ஊராட்சிகளுக்கும் ரூபாய் 86 கோடி மதிப்பீட்டில் விளையாட்டு உபகரணங்களைக் கொண்டு போய்ச் சேர்க்க வேண்டும் என்ற அடிப்படையில்தான் `கலைஞர் ஸ்போர்ட்ஸ் கிட்’ திட்டத்தை மதுரையில் கடந்த பிப்ரவரி மாதம் தொடங்கி வைத்தோம்.

### கலைஞர் ஸ்போர்ட்ஸ் கிட்

பல மாவட்டங்களில் இந்த ‘கலைஞர் ஸ்போர்ட்ஸ் கிட்’ கொடுக்கப்பட்டுவிட்டது. இன்றைக்கு ஈரோடு மற்றும் கரூர் மாவட்டங்களில் உள்ள ஊராட்சிகளுக்கு 33 வகையான விளையாட்டு உபகரணங்களைக் கொண்ட கலைஞர் ஸ்போர்ட்ஸ் கிட்டை வழங்க இருக்கிறோம்.

இந்த ஈரோடு மற்றும் கரூர் மாவட்டம், தொழிற்துறைக்கு மட்டுமல்ல, விளையாட்டுத் துறைக்கும் பல பங்களிப்பைச் செய்துள்ளது. இந்த மேடையில் நிறைய விளையாட்டுத்துறை சாதனையாளர்கள் அமர்ந்திருக்கிறார்கள். குறிப்பாக, பாரா பேட்மிட்டன் வீரரான தம்பி ருத்திக் ரகுபதி இங்கு வருகை தந்திருக்கிறார்கள்.

### வெற்றிப் பயணம்

தம்பி ருத்திக் ரகுபதி, தன் திறமையினாலும் உழைப்பாலும் இன்றைக்குப் பல்வேறு சாதனைகளைப் படைத்துக் கொண்டுள்ளார். ஜப்பானில் நடைபெற்ற `வேர்ல்டு சாம்பியன்ஷிப் போட்டி’யில் வெண்கலப் பதக்கம் வென்று, தமிழ்நாட்டிற்கும் இந்தியாவிற்கும் பெருமை சேர்த்துள்ளார். `ஏசியன் பாரா ஒலிம்பிக் போட்டி’யிலும் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தியுள்ளர். அவரின் வெற்றிப் பயணம் இந்த ஈரோடு மாவட்டத்திலிருந்து இன்னும் பல விளையாட்டு வீரர்களை உருவாக்கட்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

ஈரோடு மாவட்டத்தைச் சேர்ந்த தங்கை மகேஸ்வரி, வாலிபால் போட்டிகளில் சர்வதேச அளவில் முத்திரை பதித்து வருகிறார். அவரும் இங்கே வருகை தந்திருக்கிறார். இலங்கையில் நடைபெற்ற `ஏசியன் பீச் வாலிபால் சாம்பியன்ஷிப் போட்டி’யில் வெண்கலப் பதக்கம் வென்றவர் தான் தங்கை மகேஸ்வரி. சர்வதேச அளவில், அவர் பெற்றுவரும் வெற்றிகள் பெண்கள், மாற்றுத்திறனாளிகள் எனப் பலரும் விளையாட்டுத் துறையை நோக்கி வரச் செய்து கொண்டு இருக்கிறது. அவருக்கும் நாம் அனைவரும் நம் வாழ்த்துகளையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்வோம்.



### உந்து சக்தி

இங்கு வந்திருக்கக்கூடிய இருவரும் அனைத்து விளையாட்டு வீரர்களுக்கும் ஓர் எடுத்துக்காட்டாக, உந்து சக்தியாகத் திகழ்ந்து கொண்டிருக்கிறார்கள். நம் விளையாட்டு மேம்பாட்டுத்துறை எடுத்து வரும் பல முயற்சிகளைப் பாராட்டி ‘கான்ஃபிடரேஷன் ஆஃப் இந்தியன் இண்டஸ்ட்ரீஸ்’ அமைப்பு ‘பெஸ்ட் ஸ்டேட் ப்ரோமோட்டிங் ஆப் ஸ்போர்ட்ஸ்’ என்ற விருதை நம் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டுத் துறைக்கு அளித்திருந்தது.

போலவே, ‘தி இந்து ஸ்போர்ட்ஸ் ஸ்டார்’ பத்திரிக்கை சார்பாக, ‘பெஸ்ட் ஸ்டேட் ப்ரோமோட்டிங் ஆஃப் ஸ்போர்ட்ஸ்’ என்ற உயரிய விருதையும் நம் தமிழ்நாடு அரசிற்கும், நம் விளையாட்டுத் துறைக்கும் அளித்து கௌரவித்திருந்தது.

தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளையைத் திறந்து வைத்து, அதன் மூலம் ஏராளமான ஏழை, எளிய, மாற்றுத்திறனாளிகளைக் கொண்ட விளையாட்டு வீரர்களுக்குத் தொடர்ந்து உதவிகளைச் செய்து வருகிறோம். இதுவரை, ஏராளமான வீரர்களுக்கு தமிழ்நாடு சாம்பியன்ஸ் ஃபவுண்டேசன் மூலமாக ரூபாய் 9 கோடி அளவிற்கு நிதியுதவி அளித்திருக்கிறோம்.

தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளையில் நிதியுதவி பெற விரும்பும் விளையாட்டு வீரர்கள் www.sdat.tn.gov.in என்ற இணையதளத்தில் விண்ணப்பிக்கலாம்.

### ஊக்கத்தொகை

சர்வதேச மற்றும் தேசிய அளவிலான போட்டிகளில் பதக்கங்களை வெல்லும் நம் வீரர், வீராங்கனைகளுக்கு தொடர்ந்து உயரிய ஊக்கத்தொகையை வழங்கி வருகின்றோம். இரண்டு நாட்களுக்கு முன்புகூட, சென்னையில் நடந்த நிகழ்ச்சியில் கிட்டத்தட்ட 600 வீரர்களுக்கு ரூபாய் 14 கோடி உயரிய ஊக்கத்தொகையை வழங்கி இருக்கிறோம்.

நம் சட்டமன்ற உறுப்பினர் ஈ.வி.கே.எஸ். இளங்கோவன் அவர்கள், இங்கே பேசும்போது தன்னுடைய பேத்திக்கு ரூபாய் 9 லட்சம் உயரிய ஊக்கத்தொகை வழங்கியதை இங்கு எடுத்துக் கூறினார். அது அவருடைய பேத்திக்கு மட்டும் வழங்கப்படவில்லை. 600க்கும் மேற்பட்ட விளையாட்டு வீரர்களுக்கு 14 கோடி ரூபாய் அளவில் நம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின் பேரில் வழங்கப்பட்டது என்பதையும் பெருமையாக தெரிவித்துக் கொள்கின்றேன்.

அரசு மற்றும் அரசுப் பொதுத்துறை நிறுவனங்களில் விளையாட்டு வீரர்களுக்கு அரசு வேலை வாய்ப்புகளில் 3 சதவிகித இட ஒதுக்கீடு அடிப்படையில் வேலைவாய்ப்பு வழங்க வேண்டும் என்று உங்களைப் போன்ற பலர் கோரிக்கை வைத்திருக்கிறார்கள். கழக அரசு அமைந்த பிறகு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எடுத்துவரும் சீரிய நடவடிக்கையின் பேரில், முதற்கட்டமாக 100 விளையாட்டு வீரர்களுக்கு அரசு வேலை வாய்ப்பை வழங்க நம் முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.

இந்தியாவில் விளையாட்டுத்துறை என்றால், அது தமிழ்நாடுதான் என்கிற வகையில், தொடர்ந்து புதுப்புது முயற்சிகளை மேற்கொண்டு வருகிறோம். அதில் மிக முக்கியமானதுதான் இந்த ‘கலைஞர் ஸ்போர்ட்ஸ் கிட்’ திட்டம். விளையாட்டுத்துறை வளர்ச்சி என்பது நகரங்களில் மட்டும் தேங்கிவிடக்கூடாது. அது கிராமங்களிலி ருந்தும் வர வேண்டும் என்பதற்கான முயற்சித்தான் இந்த ‘கலைஞர் ஸ்போர்ட்ஸ் கிட்’ திட்டம்.

### புத்துணர்ச்சி

கிராமங்களிலிருந்து நிறைய விளை யாட்டுத் துறை திறமையாளர்கள் வர வேண்டும் என்ற அடிப்படையில்தான், இந்தத் திட்டத்தை நம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்தார்கள். இந்த விளையாட்டு உபகரணங்களைப் பயன்படுத்தி, கிராமங்களில் இருக்கக்கூடிய இளைஞர்கள் நல்ல உடல் ஆரோக்கியத்தோடும் புத்துணர்ச்சியோடும் இருக்க வேண்டும் என்று நான் விரும்புகிறேன், கேட்டுக் கொள்கிறேன்.

முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞரின் பெயரில், எத்தனையோ திட்டங்கள் இருக்கின்றன. எத்தனையோ திட்டங்கள் இருந்தாலும் விளையாட்டுத்துறை சார்பாக, முதன்முறையாக கலைஞர் அவர்களின் பெயரால் ஒரு திட்டம் செயல்படுத்தப்படுகிறது என்றால், அது ‘கலைஞர் ஸ்போர்ட்ஸ் கிட்’ திட்டம்தான்.

ஒரு விளையாட்டு வீரனுக்கு என்னென்ன திறமைகள் வேண்டும். நல்ல ஆற்றல் வேண்டும், கூர்மையான மன உறுதி வேண்டும். துல்லியமான கணக்கிடுதல் வேண்டும். தோல்வியிலும் துவண்டுவிடாத உறுதியான மனம் வேண்டும். நல்ல கூட்டுமுயற்சி வேண்டும்.

### துவண்டுவிடாத உறுதியான மனம்

இப்படிச் சொல்லிக்கொண்டே போகலாம். இந்தத் திறமைகள் அனைத்தையும் கொண்டவர் தான், நம் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள். அதனால்தான் இந்தத் திட்டத்திற்கு ‘கலைஞர் ஸ்போர்ட்ஸ் கிட்’ என்று பெயர் வைத்துள்ளோம். அத்தகைய கலைஞர் அவர்களின் பெயரால் வழங்கப்படும் விளையாட்டு உபகரணங்களைப் பெறக்கூடிய இளைஞர்களை நான் கேட்டுக்கொள்வதெல்லாம், கலைஞர் அவர்களுக்கு இருந்த குணங்களையும் திறமைகளையும் நீங்கள் வளர்த்துக் கொள்ள வேண்டும்.

கலைஞர் ஸ்போர்ட்ஸ் கிட்டைப் பெற, ஈரோடு மற்றும் கரூர் மாவட்டத்தில் உள்ள அத்தனை ஊராட்சிகளையும் அந்த ஊராட்சிகளின் முகமாக இங்கு வந்திருக்கக்கூடிய விளையாட்டு வீரர்களையும் மாணவர்களையும் இளைஞர்களையும் வாழ்த்துகிறேன்.

இன்றைக்கு இந்த மேடையில், கிட்டத்தட்ட 1,800 பேருக்கு வீட்டுமனைப் பட்டாவை வழங்கியிருக்கிறோம். இதில் பெருமையாகச் சொல்ல வேண்டும் என்றால், தந்தை பெரியாரின் இடத்திற்கு அவரின் பேரன் ஈரோடு கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் ஈ.வி.கே.எஸ்.இளங்கோவன் அவர்களிடம் அந்தப் பட்டாவை வழங்க இருக்கிறோம்.

### திராவிட மாடல் அரசு

பெரியாரின் பேரனுக்குப் பட்டாவை வழங்கியிருக்கிறோம். பெரியாரின் கொள்ளுப் பேத்திக்கு ஊக்கத்தொகையும் வழங்கி இருக்கிறோம் என்றால், அதுதான் இந்த திராவிட மாடல் அரசு.

பட்டா கிடைக்க வேண்டும் என்பது, பலரின் நெடுநாள் கனவு. அதனை இன்றைக்கு திராவிட மாடல் முதலமைச்சர் அவர்கள் நிறைவேற்றியுள்ளார்கள். இன்று முதல் உங்களின் வீட்டில் நீங்கள் நிம்மதியாக உறங்கலாம். உங்கள் இடத்தின் மீதான சட்டப்பூர்வமான உரிமையையும், நம் திராவிட மாடல் அரசு நிறைவேற்றியுள்ளது.

அதேபோல், இந்த நிகழ்ச்சியில் வங்கிக்கடன் இணைப்பைப்பெற்றுள்ள மகளிர் சுயஉதவிக்குழு சகோதரிகள், பல்வேறு நலத்திட்டங்கள் பெற்றுள்ள மாற்றுத் திறனாளிகள், திருநர்கள் என அனைவருக்கும் இந்த அரசின் சார்பாக, விளையாட்டுத்துறையின் சார்பாக வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஏனென்றால், நம் திராவிட மாடல் அரசு என்றைக்கும் உங்களுக்குப் பக்கபலமாக, துணையாக நிற்கும். உங்கள் கோரிக்கைகளை நிறைவேற்றுவதுதான் இந்த அரசின் கடமை என, உங்களுக்காகப் பணியாற்றிக் கொண்டே இருப்போம்.

### விடியல் பயணத் திட்டம்

நம் முதலமை ச்சரைப் பொறுத்தவரை, தமிழ்நாட்டின் ஒவ்வொரு குடும்பத்தி ற்கும் அரசின் ஒவ்வொரு சேவையும் சென்றடைய வேண்டும். ஒவ்வொரு தனிநபரும் நம் திராவிட மாடல் அரசால் பயன்பெற வேண்டும் என்று தொடர்ந்து செயல்பட்டு வருகிறார்கள். அதன் வெளிப்பாடாகத்தான் மகளிருக்குக் கட்டணமில்லாப் பேருந்து வசதி தரும் ‘விடியல் பயணம்’ திட்டம், மாணவியர்களுக்கு ‘புதுமைப்பெண்’ திட்டம், மாணவர்களுக்கு வருகின்ற 9ஆம் தேதி முதல் ‘தமிழ்ப்புதல்வன்’ திட்டம், ‘முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம்’, ‘மக்களைத் தேடி மருத்துவம்’, ‘நம்மைக் காக்கும் 48’, ‘இல்லம்தேடி கல்வி’, ‘மக்களுடன் முதல்வர்’ போன்ற எண்ணற்ற திட்டங்களை நம் திராவிட மாடல் அரசு செயல்படுத்தி வருகிறது.

### மகளிர் உரிமைத்தொகை

இதற்கெல்லாம் முத்தாய்ப்பாக ஒரு திட்டம் என்றால், அதுதான் நம் முதலமைச்சர் அவர்கள் வெற்றிகரமாக செயல்படுத்தி யுள்ள கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம். கடந்த செப்டம்பர் மாதம் முதல் இந்த ஜூலை மாதம் வரை ஒரு கோடியே 16 லட்சம் மகளிருக்கு மாதம் ஒன்றுக்கு தலா ஆயிரம் என்று வகையில், மொத்தம் 11 ஆயிரம் கோடி ரூபாய் கலைஞர் மகளிர் உரிமைத்தொகை திட்டம் மூலம் வழங்கப்பட்டுள்ளது.

இப்படி அனைத்துத் தரப்பு மக்களுக்குமான திட்டங்களை, நம் திராவிட மாடல் அரசு வழங்கி வருகிறது. இந்தத் திட்டங்களின் காரணத்தால், தமிழ்நாடு அரசு இன்றைக்கு வறுமை ஒழிப்பு, மகளிர் முன்னேற்றம், தரமான கல்வி, சுகாதாரம் உள்ளிட்ட 13 துறைகளில் இந்தியாவிலேயே `நம்பர் ஒன்’ இடத்தைப் பிடித்திருக்கிறது. இதற்கு ஒன்றிய அரசின் நிதி ஆயோக் அமைப்பே புள்ளிவிவரத்துடன் அளித்துள்ளது.

இனியும் தொடர்ந்து உங்களுக்காக உழைக்க, நம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தயாராக இருக்கிறார்கள். எனவே, இந்தத் திட்டங்களின் பயனாளிகள் என்ற வகையில் இல்லாமல், அவற்றின் பங்கேற்பாளர்கள் என்ற உணர்வோடு நீங்கள் இருக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

### உறவினர்கள், நண்பர்கள்

கழக அரசின் திட்டங்களை உங்களின் உற்றார் உறவினர்கள், நண்பர்கள் என அனைவரிடமும் எடுத்துச் செல்லுங்கள். நம் திராவிட மாடல் அரசின் திட்டங்களுக்கு `பிராண்டு அம்பாசிடர்ஸ்’ இங்கு வந்திருக்கக்கூடிய பயனாளிகளாகிய நீங்கள்தான்.

கலைஞர் ஸ்போர்ட்ஸ் கிட்டைப் பெற்ற ஈரோடு மற்றும் கரூர் மாவட்டத்தைச் சேர்ந்த கிராம ஊராட்சிகளுக்கும், அரசு நலத்திட்ட உதவிகளைப் பெற்ற அனைத்துப் பயனாளிகளுக்கும் எனது அன்பையும் வாழ்த்தையும் தெரிவித்து விடைபெறுகிறேன்.

இவ்வாறு அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பேசினார்.

அமைச்சர்கள் சு.முத்துசாமி, மு.பெ.சாமிநாதன், நாடாளுமன்ற உறுப்பினர்கள் அந்தியூர் ப.செல்வராஜ், கே.இ.பிரகாஷ், சட்டமன்ற உறுப்பினர்கள் ஈ.வி.கே.எஸ்.இளங்கோவன், ஏ.ஜி. வெங்கடாசலம், மாவட்டச் செயலாளர் நல்லசிவம், மேயர் நாகரத்தினம் சுப்பிரமணியம், விளையாட்டு மேம்பாட்டுத்துறையின் கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர்.அதுல்யா மிஸ்ரா ஐ.ஏ.எஸ்., விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் மேகநாத் ரெட்டி ஐ.ஏ.எஸ்., ஈரோடு மாவட்ட ஆட்சித் தலைவர் ராஜ கோபால் சுங்காரா ஐ.ஏ.எஸ்., எஸ்.தங்கவேல் ஐ.ஏ.எஸ்., மாநகராட்சி ஆணையர் டாக்டர். மணீஸ் ஐ.ஏ.எஸ்., உதவி ஆட்சியர் ராமகிருஷ்ணசாமி ஐ.ஏ.எஸ்., உலக சாம்பியன்ஷிப் போட்டியில் வெண்கலப் பதக்கம் வென்ற பாரா பேட்மிட்டன் வீரர் ருத்திக் ரகுபதி, ஆசிய பீச் சாம்பியன்ஷிப் போட்டியில் வெண்கலப் பதக்கம் பெற்ற கைப்பந்து விளையாட்டு வீராங்கனை மகேஸ்வரி, துணை மேயர் செல்வராஜ், மாவட்ட வருவாய் அலுவலர் சாந்தகுமார் மற்றும் உள்ளாட்சிப் பிரதிநிதிகள், அரசு அதிகாரிகள், அலுவலர்கள், உள்பட பயனாளிகள் பலரும் கலந்துகொண்டனர்.